87

INDIAN HISTORY

IV STANDARD.

TRICHINOPOLY DISTRICT.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JAN 1940
MADRAS

According to the 1939 Syllabus.

BY

A. S. GURUSWAMY B. A., L. T.,
HISTORY ASSISTANT, A. R. HIGH SCHOOL, MADURA.

AND

N. R. S. SARMA,
PASUMALAI SCHOOLS.

3718

S. N. RATHNAM & Co,
Educational Publishers,
PASUMALAI.
(MADURA DIST.)

Rights Reserved.] [4 As.

MEENALOCHANI PRESS, MADURA.

இந்திய தேச சரித்திரம்.

நான்காம் வகுப்பு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - JAN 1940
MADRAS

திருச்சிராப்பள்ளி ஜில்லா.

1939-ஆம் ௵ புதுப்பாடத்திட்டத்தின்படி எழுதப்பெற்றது.

954

ஆசிரியர்கள் :

A. S. குருசாமி B. A., L. T.,
A. R. ஹைஸ்கூல், மதுரை.

N. R. சுப்பிரமணிய சர்மா,
பல நூல்களின் ஆசிரியர்,
பசுமலைக் கலாசாலைகள்.

3584

வெளியிட்டோர் :

S. N. ரத்தினம் அண்டு கம்பெனி
கல்வி நூல் பதிப்பாளர்
பசுமலை.

காபி ரைட்] [4 அணா.

First Edition 1939.

EASEN PRINTING WORKS, MADURA.

பொருள் அடக்கம்.

பாடம்.		பக்கம்.
1.	நமது தேசம்	1
2.	அலெக்ஸாண்டரும், புருஷோத்தமரும் ...	3
3.	அசோக மஹான்	6
4.	கிறிஸ்து சகாப்தம்	8
5.	விக்கிரமாதித்தரும், நவரத்தினங்களும் ...	12
6.	ஹர்ஷவர்த்தனரும், இராஜ்யமும் ...	15
7.	முகம்மதுநபி	19
8.	பல்லவர்களும், மஹாபலிபுரமும் ...	22
9.	இராஜ புத்திரர்களும், அவர்கள் குணங்களும்	25
10.	முகம்மதியர் படையெடுப்பு ...	27
11.	கிருஷ்ணதேவராயர்	30
12.	அக்பர்	32
13.	தாஜ்மஹால்	36
14.	ராபர்ட் கிளைவ்	39
15.	விக்டோரியா மகாராணியார் ...	43

திருச்சிராப்பள்ளி ஜில்லாவின் முக்கிய சரித்திரக் குறிப்புகள்.

16.	சோழர்கள்	45
17.	மாலிக்காபரும் முகம்மதியர் ஆதிக்கமும்	50
18.	நாயக்கர்கள்	51
19.	இங்கிலீஷ்காரர்கள்	59


இந்தியா
இந்துகுஷ் மலை
கைபர் கணவாய்
சிந்து நதிப் பள்ளத்தாக்கு
பிரம்மபுத்திரா நதி
இமய மலை
கங்கா நதிப் பள்ளத்தாக்கு
விந்தியமலை
தபதி
கிருஷ்ணாநதி
காவேரி நதி
அராபிக் கடல்
வங்காள விரி குடா
இலங்கை
இந்து மஹா சமுத்திரம்

இந்திய தேச சரித்திரம்.

நான்காம் வகுப்பு.

---

1. நமது தேசம்.

நாம் வசிக்கும் தேசத்திற்கு இந்தியா என்று பெயர். அது ஆசியாக் கண்டத்தின் தெற்கிலுள்ளது; மூன்று பக்கங்களிலும் கடலாற் சூழப்பட்டிருக்கிறது. ஆனது பற்றி இதனை ஒரு தீபகற்பம் எனக் கூறுகிறோம். இவ்வுலகில் மிகச் செழிப்புற்றது நமது தேசமே. இங்குள்ள ஜனங்கள் தெய்வபக்தியிலும், புத்திக் கூர்மையிலும் சிறந்தவர்கள். பல புண்ணிய புருஷர்கள் அவதாரம்செய்ததும் நமது நாடே. ஆதலால் உலகில் புண்ணிய பூமி எது என்றால் நமது தேசமே. மேலும் நமது தேசத்தில் விளையாத பொருள் எதுவும் இல்லை.

முன் பக்கத்திலுள்ள நமது தேசத்தின் படத்தைப் பாருங்கள். வடக்கே இமயமலையும், கிழக்கில் வங்காள விரிகுடாவும், தெற்கில் இந்து மகா சமுத்திரமும், மேற்கில் அராபிக் கடலும், இந்துகுஷ், சுலைமான் மலைகளும் எல்லைகளாக உள்ளன. இந்துகுஷ் மலைக்கும்

சுலைமான்மலைக்கும் மேற்கே ஆப்கானிஸ்தானம், பெல்ஜிஸ்தானம் என்ற நாடுகள் இருக்கின்றன. இமயமலை உலகத்திலுள்ள மலைகளில் எல்லாம் உயரமானது. மற்ற பக்கங்களில் எல்லாம் கடல்கள் எல்லையாக உள்ளன. ஆதலால் மற்ற நாட்டவர்கள் நமது நாட்டின்மீது படையெடுப்பது கஷ்டம்.

இந்தியாவின் நடுவிலுள்ள விந்தியமலை இத்தேசத்தை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கிறது. இம்மலைக்குத் தெற்கிலுள்ளதைத் தென் இந்தியா என்றும், வடக்கிலுள்ளதை வட இந்தியா என்றும் கூறுவர். சிந்துநதி, கங்கைநதி, பிரமபுத்திராநதி ஆகிய மூன்றும், அவற்றின் உபநதிகளும் வட இந்தியாவில் ஓடுகின்றன. அதனால் அப்பாகம் செழிப்பாய் இருக்கிறது.

தென்னிந்தியா முக்கோண வடிவமானது. இங்கே கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, தாம்பிரவர்ணி முதலிய நதிகள் பாய்கின்றன. நாம் வசிப்பது தென் இந்தியாவே. இந்தியாவுக்கு தெற்கே இலங்கை என்ற ஒரு தீவு இருக்கிறது.

கேள்விகள்

1. நமது தேசம் எக்கண்டத்தில் இருக்கிறது?
2. இந்தியாவை இரண்டு பாகமாகப் பிரிப்பது எது?
3. இந்தியாவுக்கு மேற்கு எல்லையான மலைகள்எவை?

4. மற்ற தேசத்தவர்கள் நமது தேசத்தில் நுழைவது கஷ்டம்—ஏன்?

5. நாம் இந்தியாவின் எப்பாகத்தில் வசிக்கிறோம்?

---

2. அலெக்ஸாண்டரும், புருஷோத்தமரும்.

புத்தர் காலத்துக்குப் பின், அலெக்ஸாண்டர் என்னும் ஒரு மஹா வீரர் இந்தியாவின்மேல் படை எடுத்து வந்தார். ஐரோப்பா கண்டத்திலுள்ள கிரீஸ்தேசம் அவரது நாடு. அவர் திக்கு விஜயம் செய்யப் புறப்பட்டு நமது தேசத்திற்கு மேற்கிலுள்ள ஒவ்வொரு தேசமாய்க் கைப்பற்றிக் கொண்டு வடமேற்குக் கணவாய் வழியாக நமது தேசத்தை அடைந்தார்.

அச்சமயத்தில் சீலம் என்னும் நதிக்குச் சமீபமாகப் புருஷோத்தமர் என்னும் வேந்தர், நமது தேசத்தில் ஆண்டு வந்தார். அவர் மிகவும் பராக்கிரமசாலி. அவருக்குப் போரஸ் என்றும் பெயர்.

புருஷோத்தமர் அவரை இந்நாட்டினின்றும் வெளியேற்றி விடவேண்டும் என்று உறுதி கொண்டார்; ஆதலின் அலெக்ஸாண்டரோடு சண்டை செய்தார். அவர் மற்ற சிற்றரசர்களையும் தமக்கு உதவி செய்யுமாறு கூப்பிட்டார்.

பொறுமையால் அவர்கள் உதவவில்லை. ஆயினும் புருஷோத்தமர் மனம் தளராமல் அலெக்ஸாண்டரோடு போர் புரிந்தார்.

ஆனால் அலெக்ஸாண்டரின் படையே முடிவில் வெற்றி பெற்றது. வேறுஒரு உதவியும் இல்லாத புருஷோத்தமர் தோல்வியடைந்தார். நமது தேசத்தில் ஒத்து வாழாததால் நாம் இவ்வாறு அடையும் துன்பங்கள் பல. புருஷோத்தமரும் பகைவர்கையில் அகப்பட்டார்.

புருஷோத்தமரும் அலெக்ஸாண்டரும்.

அவர்கள் அவரைப் பிடித்துச் சென்று அலெக்ஸாண்டரின் எதிரில் நிறுத்தினர். அலெக்ஸாண்டர் அவரைப் பார்த்து, 'உம்மை எப்படி நடத்துவது உமக்குப் பிரியம்?' என்று கேட்டார். உடனே புருஷோத்தமர், 'என்னை அரசனாக நடத்துவதே எனக்குப் பிரியம்' என்று சொன்னார். அவரது தைரியத்தைக் கண்டு அலெக்ஸாண்டர் மிகவும் வியந்து, அவரது நாட்டை அவருக்கே திரும்பவும் கொடுத்து விட்டார். வடஇந்தியா முழுவதும் வெல்ல வேண்டுமென்னும் ஆசை அலெக்ஸாண்டருக்கு உண்டு. ஆயினும் அவருடைய சேனைவீரர் மேலே செல்ல மறுத்துவிட்டார்கள். ஆதலால் அவர் தம் நாட்டிற்குத் திரும்பினர். ஆயினும் ஊர்போய்ச் சேருமுன்னரே, வழியில் ஜுரம் கண்டு, தமது முப்பத்திரண்டாவது வயதிலே இறந்து விட்டார். புருஷோத்தமர் அரசராகவே வாழ்ந்து வந்தார்.

கேள்விகள்.

1. அலெக்ஸாண்டர் எந்த நாட்டு அரசர்?
2. அலெக்ஸாண்டருக்கும் யாருக்கும் இந்தியாவில் போர் நடந்தது?
3. அந்தப் போரின் முடிவு என்ன?
4. அலெக்ஸாண்டர் ஏன் விரைவில் தமது நாட்டுக்குத் திரும்பி விட்டார்?

3. அசோக மஹான்.

அலெக்ஸாண்டர் இந்தியாவை விட்டுப் போனபின், வட இந்தியாவில் ஒருபெரிய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு மௌரிய இராஜ்யம் என்று பெயர். மௌரிய வம்சத்தில் அசோகர் மிக்க கீர்த்தி வாய்ந்த அரசர்.

அசோகர்.

அவர் முதலில் கலிங்கநாட்டின்மேற் படையெடுத்தார். பெரிய போர் நடந்தது. அதில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் இறந்தார்கள். அதைக்கண்ட அசோகர் இனிப் போரேசெய்யக்

கூடாதென்று நிச்சயித்தார்; அதுமுதல் குடிகளின் நன்மையைப் பெரிதும் பாராட்டி அரசாண்டு வந்தார். குடிகள் யாவரையும் அவர் தம் குழந்தைகளைப் போலவே பாவித்து வந்தார்; மற்றவர்க்குத் தீங்குசெய்யாத தருமத்தையே கைக்கொண்டார்; ஆகையால் புத்தருடைய மதத்தைப் பின்பற்றினர். அந்த மதத்தின் கொள்கைகளைத் தம்குடிகளிடையே பரவச்செய்தார்.

தம் இராஜ்யத்தில் யாவருமே நன்னடத்தை உடையவர்களாய் இருக்கவேண்டும் என்பது அவருடைய நோக்கம். ஆகவே அவர் இராஜ்யத்தில் முக்கியமான இடங்களில் கற்பாறைகளிலும், கல் தூண்களிலும் குடிகளுக்கான புத்திமதிகளை வெட்டுவித்தார். 'பெற்றோருக்குக் கீழ்ப்படியவேண்டும். மாமிசம் உண்ணலாகாது. நல்ல வாழ்க்கையை நடத்தவேண்டும்' என்பதே அவர் எழுதியவை. படிக்கத் தெரிந்தவர்கள், இவைகள் யாவும் அரசனுடைய கட்டளைகள் என நினைத்து, சந்தோஷமாய்க் கீழ்ப்படிந்து நடந்து வந்தனர்.

அசோகர் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் வைத்தியசாலைகளை ஏற்படுத்தினர். சாலைகளை ஏற்படுத்தி அவைகளின் இருபக்கங்களிலும் நிழல்தரும் மரங்களை வைத்து வளர்க்கச் செய்-

தார். இது பிரயாணிகளுக்கு அதிகச் சௌகரியம் கொடுத்தது. அவர் சத்திரங்களையும், கிணறுகளையும் கட்டுவித்தார்; விவசாயம் விருத்தியடைவதற்காக ஏரிகளையும் கால்வாய்களையும் அமைத்தார்; தமது குடிகளிடையே கல்வியைப் பரப்புவதற்காக அநேக பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினர். அசோகர் மற்ற மதத்தினர்களைத் தொந்தரவு செய்யவில்லை. அவரிடம் பட்சபாதம் என்பதே கிடையாது. இவ்விதமான மேன்மையான செயல்களினால் அவரை இன்றும் நாம் ஒரு மஹான் எனக் கொண்டாடுகிறோம்.

கேள்விகள்.

1. அசோகர் எந்த இராஜ்யத்தின் மன்னர்?

2. அசோகர் எப்போது புத்தமதக் கொள்கைகளைப் பின்பற்றினர்?

3. புத்தமதத்தைப் பரவச்செய்வதற்கு அவர் என்ன ஏற்பாடுகளைச் செய்தார்?

4. அசோகர் தமது நாட்டிற்குச் செய்த நன்மைகளில் மூன்று கூறுக.

---

4. கிறிஸ்து சகாப்தம்.

பிள்ளைகளே! ஒவ்வொரு வருஷமும் டிசம்பர் மாதக் கடைசியில் உங்களுக்கு கிறிஸ்துமஸ் ரஜா விடுகிறார்கள் அல்லவா? அந்த ரஜா ஏன்

விடப்படுகிறது தெரியுமா? அதைப் பற்றிச் சொல்லுகிறேன், கேளுங்கள்.

நமது தேசத்துக்கு வெகு தூரம் மேற்கே சிரியா என்ற ஒரு நாடுண்டு. அங்கேயுள்ள நாசரேத் என்ற ஊரில், முன்னொரு காலம் யோசேப்பு என்னும் ஒரு தச்சன் இருந்தான். அவனுக்கு மரியாள் என்னும் கன்னி கல்யாணத்துக்கு நியமிக்கப்பட்டு இருந்தாள். அக்காலத்தில் அந்த நாட்டை ஆண்டவன், ஒரு ரோம சக்கரவர்த்தி. அவன், குடிகள் யாவரும் தங்கள் தங்கள் சொந்த ஊருக்குப் போய்க் குடிமதிப்பில் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளும்படி உத்தரவிட்டான். யோசேப்பும், மரியாளும் தங்கள் சொந்த ஊராகிய பெத்லகேம் நகரை அடைந்தார்கள். அங்கே அவர்களுக்குக் குடியிருக்க இடம் அகப்படவில்லை. முடிவில் அவர்கள் அங்குள்ள சத்திரத்தின் அதிகாரியிடம் தங்களுக்கு இடம் கேட்டார்கள். அவன் இரக்கப்பட்டு ஒரு மாட்டுத் தொழுவை அவர்களுக்குக் கொடுத்தான்.

அங்கே இயேசு என்ற ஒரு குழந்தை மரியாளுக்குப் பிறந்தது. இயேசு என்பதற்கு இரக்ஷகர் என்று அர்த்தம். பிறந்த குழந்தை

தெய்விகமானது என்பது தேவதூதர்களால் அவர்களுக்கு முன்னே சொல்லப்பட்டிருந்தது.

இயேசுநாதர் பிறந்தது டிசம்பர்-மீ 24வ இரவு ஆகும். பிரதி வருஷமும் அந்த நாள், இரவில், கிறிஸ்தவ ஆலயங்களில் ஆராதனை நடத்துவார்கள். அவர் பிறந்த எட்டாம் நாள், அக்கால வழக்கப்படி அக்குழந்தைக்கு இயேசு என்று பெயரிடப் பட்டது; வேறு சில சடங்கு-

களும் நிறைவேறின. அவர் பெரியவராகிக் கிறிஸ்து மதம் என்ற மதத்தை உண்டாக்கினர். அவர் மதத்தைச் சேர்ந்தவர்கள் இந்தியாவிலும் மற்ற தேசங்களிலும் இருக்கிருர்கள்.

இயேசுநாதருக்கு முற்கூறிய சடங்குகள் நடந்ததினமே ஜனவரி மாதம் முதல்தேதி. அன்றுமுதலே கிறிஸ்து சகாப்தம் ஆரம்பிக்கிறது. அத்தின முதல் கி. பி. என்ற வருஷங்கள் வழங்கப்படுகின்றன. அதற்கு முந்தின வருஷங்கள் கி. மு. வருஷங்கள் என்று சொல்லப்படும். இந்தச் சகாப்தமே உலகமெங்கும் அதிகமாக உபயோகப்படுகின்றது.

கி. பி:—கிறிஸ்து பிறந்ததற்குப் பின்
கி. மு:—கிறிஸ்து பிறப்பதற்கு முன்

என்பது அர்த்தம். கி. மு. என்ற வருஷங்களின் எண் வரவரக் குறைந்தே வரும். கி. பி. வருஷங்கள் வரவர அதிகரித்துக் கொண்டேவரும்.

முன் பக்கத்திலுள்ள படம் கிறிஸ்துவின் பிறப்பைக் காட்டுகிறது.

கேள்விகள்.

1. *கிறிஸ்து பிறந்த நாள் எது?*
2. *கிறிஸ்து சகாப்தம் எத்தினம் முதல் கணக்கிடப் படுகிறது?*
3. *கி. பி. என்பதன் பொருள் என்ன?*

5. விக்கிரமாதித்தரும், நவரத்தினங்களும்.

அசோகருக்கு நெடு நாளைக்குப் பிறகு, மகத நாட்டில் குப்தர் என்ற குடும்பத்தார் ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்தினார்கள். அவர்கள் துஷ்டர்களையும், கலகம் செய்கிறவர்களையும் அடக்கி நீதியோடு அரசு ஆண்டார்கள். ஆதலால் ஜனங்கள் அமைதியுடன் சுகமாய் வாழ்ந்தார்கள். நாட்டில் கல்வியும் மதங்களும் மிகவும் விருத்தி ஆயின. ஆதலால் குப்தஅரசர் ஆண்ட காலம் சிறந்ததாகக் கொண்டாடப்படுகிறது.

அக்குடும்பத்தில், இரண்டாவது சந்திரகுப்தர் ஒருவர். அவர் மாளவம், கூர்ஜ்ஜரம் முதலிய நாடுகளை வென்றார். அது முதல் அவருக்கு விக்கிரமாதித்தர் (விக்கிரம+ஆதித்தர்= பலத்தில் சூரியனைப் போன்றவர்) என்ற பெயர் உண்டாயிற்று. அவர் தமது நாட்டுக்கு உச்சினி என்ற நகரைத் தலைநகர் ஆக்கிக் கொண்டார். அங்கே ஒரு காளிகோவில் உண்டு. அந்தக் காளி தேவியிடம் அவருக்கு பக்தி அதிகம்.

நமது நாட்டின் கீர்த்தி பெற்ற அரசர்களில் விக்கிரமாதித்தர் ஒருவர். அவரைப் பற்றிப் பல கதைகள் உண்டு. அவருக்குப் பட்டி என்ற ஒரு மந்திரி இருந்தார். விக்கிரமாதித்தரும் பட்டியும், நாடு ஆறுமாதமும் காடு ஆறு

மாதமும் ஆக மாறி மாறி அரசாண்டு வந்தனர் என்ற ஒரு கதை உண்டு. அந்த அரசர் புத்தியும் பலமும் உள்ளவர். அவர் செய்யும் தீர்ப்புக்கள் மிகவும் நியாயமாயிருந்தன. அவரது பெருமைக்கு எல்லாம் அவரது தெய்விகச் சிம்மாசனமே காரணம் என்பர். அவர் இரவுகளில் சாதாரண மனிதனைப்போல் உடைதரித்து ஊரெங்கும் சுற்றித்திரிவார்; அங்கு நடக்கும் செய்திகளைக் கவனித்து வருவார். இன்னும் 'வேதாளமும் விக்கிரமாதித்தனும்' என்ற கதைகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவரைப் பற்றி இன்னும் பல கதைகள் உண்டு.


விக்கிரமாதித்தர் நாணயம்.

இவர் பெயரும் உருவமும் உள்ள நாணயம் கிடைத்திருக்கிறது. அதன் உருவத்தைப் பாருங்கள். அதன் வலக்கையில் வில்லும் இடக்கையில் அம்பும் உள்ளன. விக்கிரமாதித்தர் தவிர வேறுயாரும் அவரது வில்லை வளைக்கமுடியாதாம்.

விக்கிரமாதித்தர் கல்வியில் அதிகப் பிரியம் உள்ளவர். ஆதலால் அவர் பல சம்ஸ்கிருத

வித்வான்களை நன்கு ஆதரித்தார். அவருடைய சபையில் நவ கவிரத்தினங்கள் என்ற ஒன்பது வித்வான்கள் இருந்தார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவகைக் கல்வியில் சிறந்தவர். அவர்களுக்குக் காளிதாசர் என்பவர் தலைவர். அவர் சிறுவயதில் மாடுமேய்த்துக் கொண்டிருந்தார் என்றும், பிறகு காளிதேவியின் அருளால் கவிபாடும் சக்தியை அடைந்தார் என்றும் கதை உண்டு. அவர் சகுந்தல நாடகமும் ரகுவம்சம் முதலிய காவியங்களும் எழுதினார். அவர் எழுதிய நூல்கள் மிகவும் உயர்ந்தவை.

மற்ற எட்டு வித்வான்களும் இலக்கியம், இலக்கணம், வைத்தியம், வானசாஸ்திரம் முதலியவற்றைப்பற்றி நூல்கள் எழுதியிருக்கிறார்கள். ஆதலால் விக்கிரமாதித்தருடைய சபை எப்போதும் கல்விக்கு இருப்பிடமாய் இருந்தது.

கேள்விகள்.

(1) விக்கிரமாதித்தர் எந்த இராஜ்யத்தின் அரசர்?

(2) நவரத்தினங்கள் என்பது யாரைக் குறிக்கும்?

(3) நவரத்தினங்களின் தலைவர் யார்?

(4) அவர் எழுதிய இரண்டு நூல்களைச் சொல்லு.

6. ஹர்ஷவர்த்தனரும், இராஜ்யமும்.

கி. பி. ஆருவது நூற்ருண்டில் வட இந்தியாவில் பிரபாகர வர்த்தனர் என்பவர் ஒரு இராஜ்யத்தை ஸ்தாபித்தனர். அதன் தலைநகரம் தனேசுவரம். அவர்க்கு இராஜ்ய வர்த்தனர், ஹர்ஷவர்த்தனர் என்ற குமாரர்களும் இராஜ்யஸ்ரீ என்ற குமாரியும் இருந்தார்கள்.

அவர் காலத்தில் அவர் நாட்டுக்கு மேற்கில் ஹூணர்கள் என்னும் ஜாதியார் அடிக்கடி எதிர்த்தார்கள். அவர்களை யடக்குவதற்கு இராஜ்யவர்த்தனர் சென்ருர்; அவர்களை ஜயித்தார். ஆனல் அவர் திரும்புமுன் அவருடைய தகப்பனுர் காய்ச்சல் கண்டு இறந்துபோனுர். பிறகு ராஜ்யவர்த்தனர் அரசர் ஆனுர். சிறிது காலத்தில் அவருடைய தங்கை புருஷனுன கன்னேசி அரசனை மாளவ அரசன் கொன்று அவளைச் சிறையில் வைத்தான். இராஜ்ய வர்த்தனர் தம் தங்கையிடம் மிகவும் அன்பு உள்ளவர். ஆதலால் அவர் பெரிய சேனையோடு மாளவதேசம் சென்ருர்; சண்டையில் மாளவனைக் கொன்றுவிட்டுத் திருப்பினுர்; ஆனல் மாளவ அரசனுடைய சிநேகனுன சசாங்கன் என்பவன் வஞ்சகமாக அவரைக் கொன்றுவிட்டான். அதன்

பிறகு ஹர்ஷவர்த்தனர் அரசர் ஆனார். அப்போது அவருக்கு வயது பதினாறே.

அதற்குள் இராஜ்யஸ்ரீ சிறையினின்று தப்பி விந்தியமலைக் காடுகளுக்கு ஓடிவிட்டதாகச் செய்தி வந்தது. அவளை எப்படியாவது கூட்டிக்கொண்டு வரவேண்டுமென்று பெரிய சேனையுடன் ஹர்ஷர் விந்தியமலைப் பக்கம் சென்றார்; பல இடங்களில் தேடினார்; கடைசியில் ஓர் இடத்திற் கண்டுபிடித்தார். அச்சமயம் அவள் தீ வளர்த்து அதில் விழ இருந்தாள். அவளைத் தடுத்துப் பெரிய சேனையுடன் தமது நகர்க்கு அவர் அனுப்பிவிட்டார்; உடனே தமது அண்ணனைக் கொன்ற சசாங்கனைத் தண்டிக்கச் சேனையுடன் புறப்பட்டார்; அவனோடு சண்டை செய்து ஜயித்தார். ஆனால் அவன் எங்கோ ஓடிப்போய் விட்டான். அவன் நாட்டை ஹர்ஷர் தமது நாட்டுடன் சேர்த்துக் கொண்டார்.

அதன் பிறகு வட இந்தியாவிலுள்ள பல நாடுகளை வென்று தமக்குக் கீழ்ப்படுத்தினார். அவருடைய இராஜ்யம் வங்காளக்குடாக் கடல்முதல் அராபிக்கடல் வரையும், இமயமலை முதல் நருமதை நதிவரையும் பரவியிருந்தது. அவர்

இராஜ்யத்தின் பரப்பை இங்குள்ள பட்த்திற் பாருங்கள். தக்ஷிண நாடுகளையும் ஜயிக்க இவர்



எண்ணிப் படையெடுத்தார். அதற்காக நருமதை நதியைத் தாண்டி இரண்டாவது புலி-கேசி என்ற அரசனோடு சண்டை செய்தார்.

களைத் தரிசிக்க வந்தார். அவர் ஹர்ஷரைக் கண்டார். அவருக்காகப் பல சபைகளை ஹர்ஷர் கூட்டி மரியாதைகள் செய்தார். இவான் சுவாங் ஹர்ஷரைப்பற்றித் தமது குறிப்பில் எழுதியிருக்கிறார். "ஹர்ஷர் தமது இஷ்டம் போல் அரசாண்டார். ஆயினும் அவருடைய அரசாட்சி நன்றாயிருந்தது. நாட்டில் கலகங்கள் கிடையா. ஹர்ஷர் தர்மிஷ்டர். அவர் தாமே தேசத்தைச் சுற்றிப் பார்த்து வந்தார். பள்ளிக்கூடங்கள் பல ஊர்களில் வைக்கப்பட்டு இருந்தன" இவைகளே இவான் சுவாங் எழுதியவை. இவற்றால் ஹர்ஷர் எப்படி இருந்தார் என்பது விளங்குகிறது அன்றோ!

கேள்விகள்.

1. ஹர்ஷவர்த்தனரோடு கூடப் பிறந்தவர்கள் யார்?
2. ஹர்ஷவர்த்தனர் ஜனங்களுக்குச் செய்த நன்மைகளில் இரண்டைச் சொல்லு.
3. இவான் சுவாங் யார்?
4. அவர் ஹர்ஷரைப் பற்றி என்ன எழுதினார்?

---

7. முகம்மது நபி.

பல தேசங்கள் கூடியது ஒரு கண்டம். நமது தேசமோ ஆசியா கண்டத்தைச் சேர்ந்ததென்று உங்களுக்குத் தெரியும். இந்த ஆசியா

ஆனால் அதில் ஹர்ஷர் தோல்வியடைந்தார்; பிறகு தமது நாட்டுக்குத் திருப்பினார். கன்னோசி நகரைத் தலைநகர் ஆக்கிக்கொண்டார்.

முப்பது வருஷங்கள் பல நாடுகளை வென்ற பிறகு, அவர்போர் செய்வதை நிறுத்தினார். அவர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர். அதைப் பரவச்செய்யும் வழிகளைச் செய்தார்; ஆயினும் மற்ற மதங்களை வெறுக்க வில்லை; பிராமணர் களையும் ஜயினர்களையும் நன்கு ஆதரித்தார்.

ஹர்ஷரும் அசோகரைப்போல் குடிகளுக்-குப் பல நன்மைகளைச் செய்தார்; குடிகளிடம் சொற்ப வரியே வாங்கினார்; பல சாலைகளையும் சத்திரங்களையும், சாவடிகளையும், ஆஸ்பத்திரி களையும் அமைத்தார்; அவர் கல்வியிற் பிரியம் உள்ளவர். அவரும் சம்ஸ்கிருத பாஷையில் மஹாவித்துவான். அவர் ரத்னாவளி, பிரியதரிசி முதலிய நாடகங்களை எழுதினார். பாண பட்டர் என்பவர் அவர் காலத்திலிருந்த வித்துவான். அவர் ஹர்ஷ சரித்திரத்தை எழுதினார். அதில் ஹர்ஷருடைய பெருமை நன்கு விளக்கப்பட்-டிருக்கிறது.

அவர் காலத்தில் இவான் சுவாங் என்ற சீனயாத்திரிகர் இந்தியாவுக்கு வந்தார். அவர் பௌத்தர். ஆதலால் இங்குள்ள புத்தர் கோவில்-

கண்டத்தில் அரேபியா என்னும் ஒரு தேசம் உண்டு. அது நமது தேசத்துக்கு 300 மைலுக்கு மேற்கில் உள்ளது. அத்தேசத்தில் சுமார் 1300 வருடங்களுக்குமுன், முகம்மது நபி என்றொரு மகான் அவதரித்தார். அவர் பிறந்த உடனேயே அவருடைய பிதா காலஞ்சென்றார். பிறகு சில வருடங்களில் தாயாரும் இறந்துபோனார். தாய் தந்தையர் இல்லா இச்சிறு குழந்தை தன் சிறிய தகப்பன் வீட்டில் வளர்ந்து வரலாயிற்று.

தாய் தந்தை இல்லாததால் தம்முடைய சொந்த முயற்சியாலேயே மேன்மை அடைய வேண்டும் என்பது முகம்மதுக்குப் பால்யத்திலேயே தெரிந்தது. தாம் படும் கஷ்டங்களினால் உலகக் கஷ்டங்களையும் அவர் உணர்ந்தார். இவ்வாறு இவருக்குச் சிறு வயதிலேயே தம் நாட்டிலுள்ள பழக்க வழக்கங்களைச் சீர்திருத்தம் செய்யும் நோக்கம் உண்டாயிற்று.

ஆயினும், பெற்ற தகப்பனும், அவர் தேடி வைத்த பொருளும் இல்லாததனால், இவர் வேலையில் அமர்ந்து வாழ்நாளைக் கழிக்க நினைத்தார். அப்படியே மெக்கா என்னும் நகரில் கடிஜா என்ற சீமாட்டியிடம் வேலையில் அமர்ந்தனர். அவள் முகம்மதைவிட வயதில் முதிர்ந்தவள். உலக அனுபவமும் அதிகம்

உள்ளவள். இப்படி இருக்கும்பொழுதே சின்னம் சிறுவயதினரான நமது முகம்மதுவின் சாமர்த்தியத்திலும், அழகிலும் ஈடுபட்டுக் கடிஜா என்ற சீமாட்டி இவரைப் புருஷனுகக் கொண்டாள். முகம்மதுவின் எண்ணம் நிறைவேறும் காலமும் வந்தது.

வயிற்றுப் பிழைப்புக்குச் சம்பாதிக்க வேண்டிய காரணம் நீங்கவே, முகம்மது பகிரங்கமாக அக்கால நாகரீகத்துக்கு விரோதமான கோட்பாடுகளை வெளிப்படுத்தல் ஆயினர். அநேகர் முதல் முதல் அவைகளை அங்கிகாரம் செய்யாவிட்டாலும், முகம்மது ஊக்கத்துடன் அவைகளைப் பரவச்செய்ய வேண்டிய முயற்சியை எடுத்துக்கொண்டார். இவருடைய கோட்பாடுகளை இவருடைய பெண்சாதியே முதலில் அங்கிகரித்தாள். பிறகு இவரது சிறிய தகப்பனுரும், சுற்றத்தாரும் தழுவினுர்கள்.

பொது ஜனங்கள் அவைகளை இலகுவில் ஒப்புக்கொள்ளவில்லை, முகம்மது இடமும், அவரைச் சேர்ந்தவர் இடமும் விரோதங் கொண்டு விரட்டினுர்கள். மெக்கா என்ற நகரிலிருந்து மெடினு என்ற நகருக்கு முகம்மது போகவேண்டியதாயிற்று. அவ்விடம் சென்று அதிகப் பிரயாசையோடு அவர் தமது மதத்-

தைப் பரவச்செய்துவந்தார். நாளடைவில் அரேபியா முழுதும் அவர் மதம் பரவிற்று.

இவர் ஏற்படுத்திய மதம்தான் முகம்மதிய மதம். இந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் முகம்மதியர்கள். அவர்களுடைய வேதம் குரான் எனப்படும். நமது தேசத்தில் ஏழுகோடி ஜனங்களுக்குமேல் அவர்கள் இப்போது இருக்கிறார்கள். இந்த மதத்தின் சில கொள்கைகளை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். 'கடவுள் ஒருவரே; அவரை நமக்குக் காட்டுபவர் முகம்மது நபியே; அவரைத் தவிர வேறு ஆசிரியர் அல்லர்' என்பதாம். முகம்மதுவுக்குப்பின் மதத்தலைவராக வந்தவருக்குக் காலிப் என்று பெயர்.

கேள்விகள்.

1. முகம்மது நபி எந்தத் தேசத்தில் பிறந்தார்?
2. அவர் ஏற்படுத்திய மதம் எது?
3. அவர் மதத்தின் கோட்பாடுகளில் இரண்டைக் கூறு.

---

8. பல்லவர்களும், மஹாபலிபுரமும்.

நமது நாட்டிற் பல்லவர் என்ற ஒரு வகுப்பார் இருந்தார்கள். அவர்கள் தேகபலம் உள்ளவர்கள். அவர்களைச் சேர்ந்தவர்கள் இப்-

போதுள்ள வன்னியர், பள்ளி, படையாச்சி என்ற ஜாதியார் என்று சொல்லுகிருர்கள். இந்த அரசர்கள் கி. பி. 200 முதல் 900 வரை ஆட்சி செய்தார்கள்.

பல்லவ இராஜ்பத்தின் முக்கியமான தலை நகரம் காஞ்சீபுரம். பல்லவ அரசர்களிற் சிலர் சேர சோழ பாண்டியர் முதலிய பல அரசர்களை ஜயித்தார்கள். இலங்கையையும் படையெடுத்துச் சென்ருர்கள்.

இவ்வரசர்கள் தென்னிந்தியாவிலுள்ள பல கற்கோவில்களைக் கட்டினுர்கள். இவர்கள் காலத்தில்தான் முதல் முதலில் கல்கோவில்கள் கட்டப்பட்டன. மலைகளைக் குடைந்து குகைக் கோவில்களை உண்டாக்கினவர்களும் இவர்களே. இவர் காலத்தில் சிற்பவேலைகள் விருத்தி ஆயின. இந்த அரசர்களில் நரசிம்ம வர்மா என்பவர் ஒருவர். அவர் சென்னைக்குச் சமீபத்தில் இருக்கிற மஹாபலி (மாமல்ல) புரத்தில் உள்ள கல்கோவில்களையும் கல்ரதங்களையும் செய்வித்தார். இங்குள்ள படத்தைப் பாருங்கள். அதில் ஏழு கோவில்கள் உள்ளன. அவைகள் சில தெய்வங்களுக்காக ஆக்கப்பட்டவை. அவை பாறைகளைக்குடைந்து செதுக்கப்பட்டு உள்ளன.



மஹாபலிபுரம் கோவில்கள்.

அவை பார்ப்பதற்கு வெகு அழகானவை. நீங்கள் நேரிற் பார்த்தால் அவற்றின் பெருமை நன்கு தெரியும்.

கேள்விகள்.

1. பல்லவ இராஜ்யத்தின் தலைநகரம் எது?

2. பல்லவ அரசர்களின் காலத்தில் கட்டிடங்கள் எவற்றுல் கட்டப்பட்டன?

3. மகாபலிபுரக் கோவில்கள் யாரால் ஆக்கப் பட்டன?

---

9. இராஜபுத்திரர்களும் அவர்கள் குணங்களும்.

விந்திய மலைக்கு வட பாகத்தில் இராஜ-புதனம் என்ற நாடு ஒன்று இருக்கிறது. அதில் சுமார் 1200 வருஷங்களுக்குமுன் ஒருவகை ஜாதியார் வசித்து வந்தனர். அவர்கள் ஆரியர் வகுப்பைச் சேர்ந்த க்ஷத்திரியர்கள். அவர்-களுக்கு இராஜ புத்திரர் என்று பெயர். அவர் களிற் சிலர் தங்களைச் சூரிய குலத்தவர் என்றும், சிலர் சந்திர குலத்தவர் என்றும் சொல்லிக் கொள்ளுகிருர்கள்.

இராஜபுத்திரர் எலுமிச்சம்பழம் போன்ற நிறமுடையவர்கள்; மிகுந்த அழகும் கம்பீரத்

தோற்றமும் உடையவர்கள். அவர்களிடம் இராஜலட்சணங்களும், வீரமும், பலமும் குடி கொண்டிருந்தன. தங்கள் உயிர் போனாலும் அவர்கள் தங்கள் மானத்தைக் காப்பாற்றுபவர்கள். அவர்கள் வாக்கு மாருத சத்தியவந்தர்.

இராஜபுத்திரர் யுத்தம் செய்வதில் பிரியமுள்ளவர்கள்; யுத்தத்தில் பயந்து பின்வாங்கமாட்டார்கள். உயிர் போகும்வரை சண்டை செய்தே சாவார்கள். தங்கள் விரோதிகள் தோற்றுப் போனால், அவர்களைக் கொல்லுவதும், தொந்தரவு செய்வதும் இல்லை. விரோதிகள் பயந்து அடிபணிந்தால், அவர்களை மன்னிக்கும் குணம் இவர்களிடம் இருந்தது. ஆனால் தாங்கள் தோற்றுப் போவதாகத் தெரிந்தால், அதிக வீராவேசத்துடன் போர்புரிந்து மடிவார்கள்; எதிரிகளுக்குப் பணியமாட்டார்கள்.

ஆண்களைப் போலவே இராஜபுத்திரப் பெண்களும் அழகும், மிகுந்த பலமும், தைரியமும் உள்ளவர்கள். புருஷர்கள் களைத்துப் போன சமயங்களில், தாங்களும் யுத்த உடை தரித்துச் சண்டை செய்வார்கள். அவர்கள் மானம் உள்ளவர்கள்; புருஷ பக்தி மிகுந்தவர்கள். தம் புருஷர்கள் இறந்தாலும், தங்கள்

மானம் கெடுவதாக இருந்தாலும், உடனே அக்கினி வளர்த்து அதில் குதித்து இறப்பார்கள். இதை 'ஜோஹர்' என்பர்.

ஆயினும் இராஜபுத்திரர் தங்களுக்குள் ஒற்றுமை இல்லாதவர்கள். பற்பல இராஜ்யங்களைத் தனித்தனியாய் ஆண்டதாலும், தங்களுக்குள் ஐக்கியம் இல்லாததாலும், பிற்காலத்தில் இவர்கள் செல்வாக்கு அழிந்தது.

கேள்விகள்.

1. இராஜ புத்திரர்கள் வசித்த இடம் எது?

2. இராஜபுத்திர வீரர்களின் குணங்களில் இரண்டு சொல்.

3. இராஜபுத்திரப்பெண்களின் குணங்களில் இரண்டு கூறு.

---

10. முகம்மதியர் படையெடுப்பு.

முகம்மது நபியைப் பற்றி முன்னே படித்தீர்கள். அவர் ஏற்படுத்திய முகம்மதிய மதம் முதலில் அரேபியாவில் பரவினது. பிறகு அந்த மதம், பாரசீகம், துருக்கிஸ்தானம், ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளிலும் விரைவாகப் பரவினது. வெகுகாலமாக அரேபியருக்கு இந்

தியாவைப் பற்றித் தெரியும். முகம்மதுக்குப் பின் அவர்கள் கடல்வழி வந்து சிந்து மாகாணத்தை எதிர்த்தனர். அது முதல் அங்கே சில முகம்மதியர்கள் தங்கினார்கள். அவர்கள் தரை வழியாகவும் இங்கே வந்து வியாபாரம் செய்தார்கள். முகம்மது காஸிம் என்பவர் சிந்துவில் ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்தினார்.

முகம்மதுகஜினி.

அதற்கு 300 வருஷங்களுக்குப் பின், ஆப்கானிஸ்தானத்தில் முகம்மது கஜினி ஆண்டார். அவர் நல்ல போர்வீரர்; வித்வான்களை ஆதரித்தார்; இந்தியா பணமுள்ள தேசமென்று கேள்விப்பட்டார். அவர் பண ஆசை பிடித்தவர். மேற்குக் கணவாய்களின் வழியே இந்தியாவுக்கு வந்தார். அப்படிப் பலமுறை செய்தார். ஒவ்வொரு தடவையும் ஏராளமான பொருள்களை வாரிக்கொண்டு போனார். அவர் கடைசிமுறை சோமநாதபுரம் கோயிலை வளைத்துக் கொண்டார். விக்கிரகத்தை உடைத்தார். மிகுந்த நகைகளை எடுத்துக்கொண்டு கஜினியை அடைந்தார். அங்குப் பல கட்டிடங்கள் கட்டினார்.

அவருக்குப் பின்பு கோரி வமிசத்தார் ஆப்கானிஸ்தானத்தில் ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்தினர்கள். அவர்களில் முகம்மது கோரி ஒருவர். அவர் இந்தியாவைக் கொள்ளையடிக்கவும் ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்தவும் நினைத்தார். அதற்காக அவர் பல தடவை படையெடுத்தார்.

முகம்மது கோரி.

அக்காலத்தில் டில்லியைப் பிருதிவியும் கன்னோசியை ஜயசந்திரரும் ஆண்டார்கள். ஜயசந்திரர் மகள் சம்யுக்தையைப் பிருதிவி தூக்கிக் கொண்டு போய்க் கல்யாணம் செய்து கொண்டார். அது ஜயசந்திரருக்குப் பிடிக்கவில்லை. ஆதலால் அவர் பிருதிவியைத் தண்டிப்பதற்குக் கோரியின் உதவியை வேண்டினர். அதுவே நல்ல சமயமென்று கோரி பிருதிவியை எதிர்த்தார். பிருதிவி முதலில் ஜெயித்தார்; ஆனல் மறுவருஷம் சண்டையில் இறந்தார்.

பிறகு கோரி ஜயசந்திரரையும் வென்று அவர் நாட்டையும் பிடுங்கிக் கொண்டார். இப்படியே வட இந்தியாவின் பெரும் பாகத்தை வென்று முகம்மதிய இராஜ்யத்தை இந்தியாவில்

ஸ்தாபித்தார். இவரே இந்தியாவில் முதல் முதலில் பெரிய முகம்மதிய இராஜ்யத்தை ஏற்படுத்தினவர்.

கேள்விகள்.

1. முதலில் இந்தியாவுக்கு எந்த நாட்டு முகம்மதியர் வந்தார்கள்?

2 கஜினி முகம்மது இந்தியாவின் மேல் படையெடுத்து வந்த காரணமென்ன?

3. இந்தியாவில் முதல் முதலில் முகம்மதிய ராஜ்யத்தை ஏற்படுத்தினவர் யார்?

---

11. கிருஷ்ணதேவராயர்.

ஹம்பி என்பது துங்கபத்திரை நதிக்கரையில் உள்ள ஒரு நகரம். அதற்கு விஜயநகரம் என்றும் ஒரு பெயர் உண்டு. அங்கு ஒரு இராஜ்யம் ஏற்பட்டது. முதன் முதலில் அங்கு அரசு செலுத்தியவன் புக்கன் என்பவன். அவன் சேனைகளைச் சேகரித்து முகம்மதியர்களை யோட்டித் தென்னிந்தியாவில் இந்து இராஜ்யத்தை நிலை நாட்டினன். அந்த இராஜ்யத்துக்கு விஜயநகர இராஜ்யம் என்று பெயர்.

கிருஷ்ணதேவராயர்.

அவனுக்குப் பின் வந்தவர்கள் நாட்டின் முன்னேற்றத்தைக் கவனித்தனர். அவர்களில் கிருஷ்ணதேவராயர் என்ற பெருமன்னர் இருந்தார். அவர் மிகவும் கீர்த்தி வாய்ந்தவர். அவருக்கு வயது இருபதாகவே, இராஜ்யாதிகாரம் அடைந்தார். இராஜ்ய விஷயங்களை ஆலோசித்து நீதி செலுத்துவதில் அவர் எப்பொழுதும் கவனமாய் இருந்தார்; மிக்க கடினமான வேலைகளையும் செய்வார். அவர் மிகு பலசாலி. அவரது தோற்றம் கம்பீரமானது. அவருக்கு வித்வான்களிடம் பிரியம் அதிகம். கிழக்கிலும் தமது இராஜ்யத்தை அவர் விஸ்தாரப்படுத்தினர்; வடக்கிலும் முகம்மதியரை எதிர்த்து வென்றார். தம்முடைய இராஜ்யமெங்கும், அதிக அழகான கட்டிடங்களைக் கட்டினார்; ஏரிகளை வெட்டினார்; கால்வாய்களை உண்டாக்கினார்.

அப்பாஜி என்றவர் அவருடைய மந்திரி. அவர் அதிக சாமர்த்தியசாலி. அவரைப்பற்றி 'ராயர் அப்பாஜி' என்பது போன்ற புத்தகங்களில் நீங்கள் அதிகம் படிக்கலாம். ஒரு சமயம் கிருஷ்ணதேவராயருக்கும் பீஜப்பூர் சுல்தானுக்கும் போர் மூண்டது. அதில் ராயரே வென்ருர். பின் இருவருக்கும் சமாதானம் ஏற்பட்டது. கிருஷ்ணதேவராயர் காலத்திலே விஜயநகர இராஜ்யம் மகா உன்னத நிலையில் இருந்தது.

கேள்விகள்

1. கிருஷ்ணதேவராயர் குணங்களில் மூன்று கூறு.
2. கிருஷ்ணதேவராயர் யார் யாரை வென்ருர்?
3. கிருஷ்ணதேவராயர் ஜனங்களுக்குச் செய்த இரண்டு நன்மைகளைச் சொல்லு.

---

12. அக்பர்.

பேபருக்குப் பின்னர் ஹுமாயூன் அரசர் ஆனர். இவர் இளமையிற் கஷ்டப்பட்டார். ஹுமாயூனை ஷேர்ஷா என்பவன் நாட்டை விட்டுத் துரத்திவிட்டான். நாட்டைவிட்டு ஓடும்பொழுது அமரக்கோட்டை என்னும் இடத்தில் ஹுமாயூன் மனைவி ஒரு ஆண்

குழந்தையைப் பெற்ருள். அதற்கு அக்பர் என்று ஹுமாயூன் பெயரிட்டார். அக்பர் என்-

அக்பர்.

ருல் பெரியவர் என்று பொருள். தம் பெயருக்கு ஏற்றவாறு மிக்க கீர்த்தியுடன் இவர் இந்தியா-விற் செங்கோல் செலுத்தினர். இவர் இராஜ லக்ஷணங்கள் அமைந்தவர்; உயரத்தில் நடுத்தரமானவர்.

பதின்மூன்ருவது வயதில், இவரது தந்தை ஹுமாயூன் இறந்துவிட்டார். அவர் இறக்கவே, அக்பர் சிம்மாசனம் ஏறினர். அக்பருக்கு, பெயிராம்கான் என்ற மாமன் ஒருவன் இருந்தான். அவன் பெரும் யுத்த வீரன். அக்பர் இளவயதாயிருந்ததனுல் பெயிராம்கானே பிரதிநிதியாக இருந்து இராஜ்யபத்தைப் பார்த்து வந்தான். ஆனுல் பெயிராம்கான் கருவங்கொண்டான். சில விஷயங்களில் அக்பருக்கு அவனிடம் வெறுப்பு உண்டாயிற்று.

அப்பொழுது அக்பருக்கு வயது பதினெட்டு. அவர் தாமே இராஜ்யத்தை ஆள ஆரம்பித்தார். உடனே பெயிராம்கான் கோபங் கொண்டு கலகம் செய்தான். அக்பர் அவனை அடக்கிவிட்டார். ஆனுல் அவனைக் கொல்ல அவர் மனம் துணியவில்லை. அவனுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து மெக்காவுக்கு யாத்திரை போகும்படி அனுப்பிவிட்டார்.

அவர் 50 வருஷங்கள் ஆண்டார். இந்தியாவில் ஆண்ட மொகலாய அரசர்களில் அக்பர் மிகவும் நல்லவர்; அதிகக் கீர்த்தி வாய்ந்தவர்; உத்தம புருஷர். அவர் தேசத்திற்குச் செய்த நன்மைகள் அநேகம். முன்காலத்தில் இந்துக்களில் புருஷன் இறந்து விட்டால், அவர்

மனைவியரும் உடன் இறக்கவேண்டும். இரண்டு பேர்களையும் சேர்த்துக் கொளுத்தி விடுவார்கள். இதற்கு உடன் கட்டை ஏறுதல் அல்லது சதி என்று பெயர். இந்தக் கொடிய பழக்கத்தை அக்பர் நிறுத்திவிட்டார். அவர் இராஜ்யாதிகாரம் அடைந்தபொழுது அவரது தேசம் சிறிதாயிருந்தது. பக்கத்திலிருந்த ஆப்கானியர்களும், இராஜபுத்திரர்களும் அவரை எதிர்த்தார்கள். தமது பலத்தால் அவர்கள் எல்லாரையும் அவர் வென்றார்.

அக்பருக்கு நாட்டைப் பரிபாலிப்பதில் சிரத்தை அதிகம். முகம்மதியர் என்றாலும், இந்துக்கள் என்றாலும் அவருக்கு வித்தியாசம் இல்லை. முகம்மதியர் அல்லாதவர்க்கு அதிக வரிகள், முகம்மதிய அரசர்களால் ஏற்பட்டிருந்தன. அக்பர் அவைகளை நிறுத்திவிட்டார். தேசம் எங்கும் சமாதானம் பெருகும்படி பல பெருமுயற்சிகள் செய்தார். அவருடைய சிறந்த மந்திரிகளுள் தோடர்மால் ஒருவன். விளை நிலங்களை அளந்து அவற்றிற்கு ஏற்றபடி நியாயமான தீர்வையை அவன் விதித்தான்.

அக்பருக்கு வித்வான்களிடம் பிரியம் அதிகம். அவர்களுக்கு ஏற்றபடி அவர் சன்மானம் செய்தார். இந்துமத ஆசாரங்களிலும்

அவருக்கு அருவருப்பு இல்லை. அவர் சில சமயங்களில் இந்துவைப்போல் உடைதரித்துக் கொள்வார். அவ்வளவு பேதமில்லாமல் இருந்ததனுல், ஜனங்களுக்கு அவரிடம் பிரியம் அதிகமாயிற்று. அவர் இரண்டு இராஜபுத்திர ஸ்திரீகளை விவாகம் செய்து கொண்டார். தமது மகனுக்கும் ஒரு இராஜபுத்திர ஸ்திரீயைக் கலியாணம் செய்து வைத்தார்.

கேள்விகள்.

1. அக்பர் யாருடைய மகன்?

2. அக்பர் ஜனங்களுக்குச் செய்த நன்மைகளில் மூன்று சொல்லு.

3. அக்பர் மதத் துவேஷம் இல்லாதவர். இது எதனுல் தெரிகிறது?

13. தாஜ் மஹால்.

ஷாஜஹான்

ஷாஜஹான் என்றவர் அக்பரின் பேரர். அவரும் தமது பாட்டனுரைப்போல் மிகவும் நல்ல அரசர்; குடிகளிடம் இரக்கம் உள்ளவர். அவர் சிற்ப சாஸ்திரத்தில் மிகப் பிரீதியுள்ளவர்; நாடெங்கும் நல்ல கட்டிடங்-

களைக் கட்டினார்; அநேகவித இரத்தினங்களால் இழைக்கப்பட்ட மயிலாசனம் ஒன்றையும் செய்தார். இவ்வுலகத்திலுள்ள சமாதுகள் எல்லாவற்றிலும் சிறந்த பெரிதான தாஜ் மஹால் என்ற ஒரு சமாதும் கட்டினார். ஆகவே இவருக்குக் கட்டிடங்களை நிர்மிப்பதில் பிரியம் அதிகம் என்று அறிகிறோம்.

மும்தாஜ் மஹால்.

இவருக்கு மும்தாஜ் மஹால் என்றொரு மனைவியுண்டு. அவள் மிக்க அழகு உள்ளவள். அவளிடத்தில் அவருக்குப் பிரியம் அதிகம். அவர்கள், இருவருக்கும் உடல் இரண்டு, உயிர் ஒன்று என வாழ்ந்து வந்தனர். மும்தாஜ்மஹால் ஒரு தடவை கர்ப்பவதி ஆனாள். அதனால் அவளுக்கு நோவுண்டாகி அவள் இறக்கும் தருணத்தில் இருந்தாள். அப்போது அவள் ஷாஜஹானிடம் இரண்டு வரங்களைப் பெற்றுக்கொண்டாள். அவைகளில் ஒன்று, தான் இறந்த பிறகு ஷாஜஹான் வேறொரு பெண்ணை விவாகம் செய்துகொள்ளக் கூடாதென்பது. மற்றொன்று,

தன்னை அடக்கம் செய்யுமிடத்தில் ஒரு அழகான கட்டிடம் கட்டவேண்டும் என்பது ஷாஜஹான் அவள் விருப்பத்திற்கு இணங்கினர். பிறகு அவள் இறந்தாள். ஷாஜஹான் அவளை ஆக்-ராவில் அடக்கம் செய்தார். அவ்விடத்தில் அவள் ஞாபகார்த்தமாக அவர் ஒருகட்டிடம்



தாஜ் மஹால்.

கட்டினர். அது இன்னும் புதிதாகவே காணப்படுகின்றது. அதன் ஸ்தூபிகள் அழகானவை. இந்தியாவில் வேறெங்கும் அவ்வளவு அழகான கட்டிடம் இல்லை. இறந்துபோன மனைவியின் பேரைப் பின்பற்றி அக்கட்டிடத்துக்கும் தாஜ்-மஹால் எனப் பெயரிட்டார். உலகத்தில் ஏழு

விசித்திரக் காட்சிகள் உண்டென்று நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அவைகளில் ஷாஜஹானல் கட்டப்பட்ட இந்தத் தாஜ் மஹாலும் ஒரு விசித்திரக் காட்சியாகும்.

கேள்விகள்.

1. ஷாஜஹான் செய்த சிம்மாசனம் எது?
2. ஷாஜஹான் கட்டிய கட்டிடம் எது?
3. அவர் அதை ஏன் கட்டினர்?

---

14. ராபர்ட் கிளைவ்.

ராபர்ட் கிளைவ்.

இந்தியாவுக்கு வந்த ஆங்கிலேயர்களுள் கிளைவ் என்பவரும் ஒருவர். இவர் இங்கிலாந்து தேசத்தில் ஒரு தனகரின் பிள்ளை. இவருக்குத் தைரியம் மிகவும் அதிகம். அதுபோல் முரட்டுத்தனமும், பலமும் அதிகம். இவர் பால்யத்தில் தம்மை யொத்த சிநேகிதர் பலரைச் சேர்த்துக் கொண்டு தெருத் தெருவாய்ச் சுற்றுவார்; கடைக்காரர் தாம் கேட்டதைக் கொடாவிட்டால் சாக்-

கடையை மறித்து அதன் தண்ணீரைக் கடைகளில் செல்ல விடுவார். பள்ளிக்கூடத்தில் இவர் ஒழுங்காக வாசிக்கமாட்டார்.

உபாத்தியாயர்கள் இவரைப் படிக்கவைப்பதிற் பயனில்லை என்று கூறினர். ஒரு உபாத்தியாயர் மாத்திரம் 'ஒருநாள் அதியுன்னத நிலைமையை இவர் அடைவார்' என்று கூறியிருந்தார். இவருடைய பெற்றோர்களுக்கு இவரை இன்னது செய்வது என்று தெரியவில்லை. எப்படியாவது 'இவன் இவ்விடத்தைவிட்டு ஒழிந்தால் சரி' என்று ஈஸ்ட் இந்தியா கம்பெனியில் ஒரு குமஸ்தா வேலையை வாங்கிக் கொடுத்து இவரைச் சென்னைக்கு அனுப்பிவிட்டார்கள்.

கிளைவ் சென்னைக்கு வந்து வேலையில் அமர்ந்தார். முரட்டுத் தனமாய்த் திரிந்த அவருக்குப் பேனாப்பிடித்து எழுதுவது சிரமமான காரியமாய் இருந்தது. என்ன செய்வது என்று அவர் யோசித்தார். அவர் தற்கொலை செய்து கொள்ளவும் எண்ணினார்; இரண்டு முறை சுட்டுக்கொண்டார். இரு முறையும் குண்டு தவறியது. 'ஏதோ ஒரு பெரிய காரியம் என்னால் முடிவுபெற வேண்டுமென்றே கடவுள் என் உயிரை வாங்கிக்கொள்ளவில்லை' என நிச்சயித்தார். அப்படியே சம்பவங்களும் ஏற்பட்டன.

அக்காலத்திலே இந்தியாவில் இங்கிலீஷ்-காரருடைய நிலைமை அதிகக் கேவலமாயிருந்-தது. சந்தா சாஹேபும் மகம்மது அலியும் ஆற்-காட்டின் நவாப் பட்டத்துக்காகச் சண்டை-யிட்டனர். பிரெஞ்சுக்காரர்கள் சந்தா சாஹேபுக்கு உதவி செய்தனர். இங்கிலீஷ்காரர் முகம்மது அலிக்கு ஒத்தாசை செய்தார்கள். கிளைவ் ஆற்-காட் நகரைப் பிடித்துக் கொண்டார். முகம்ம-தலி கர்நாடக நவாப் ஆயினர். பிரெஞ்சுக்கார-ருடைய கீர்த்தியும் கர்வமும் குறைந்தன. அதனால் இங்கிலீஷ்காரர்களுக்குப் பேர் உண்-டாயிற்று. இவ்வளவு காரியங்களையும் முடித்து விட்டுக் கிளைவ் இளைப்பாற இங்கிலாந்துக்குப் போனார்.

இரண்டு வருடம் இங்கிலாந்தில் இருந்த-பின், அவர் இந்தியாவுக்குத் திரும்பினர். அந்தச் சமயத்தில் இந்தியாவில் எல்லாம் தாறு-மாறுயிருந்தன. வங்காளத்தில் இங்கிலீஷ்-காரர் அப்போது வியாபாரம் செய்துவந்தனர். வங்காள நவாபான சிராஜ்-உத்-தௌலா, அவர்-களுக்குச் சில வியாபாரச் சலுகைகள் கொடுக்க மறுத்தார். ஐரோப்பாவிலும், இந்தியாவிலும் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் கடும் போர் மூண்டது. சிராஜ்-உத்-தௌலா பிரெஞ்சுக்-

காரருடன் சேர்ந்துகொண்டார். பிளாசி என்னும் இடத்தில் கிளைவ், நவாபினது சேனையைத் தோற்கடித்தார். வங்காளத்தில் அவர்களுடைய வியாபாரம் நிலைத்தது.

வங்காளம் இங்கிலீஷ்காரரர் வசப்பட்டது. கிளைவ் கொஞ்சகாலம் இங்கிலாந்து சென்று இளைப்பாறி வங்காளத்துக்குக் கவர்னராக வந்தார். ஆங்கில அரசாட்சியை இந்தியாவில் நிலைநிறுத்திவிட்டு இங்கிலாந்து சென்றார்.

இந்தியாவில் இருந்தபொழுது அவர் சிற்சில குற்றஞ் செய்ததாகத் தெரிந்தது. இங்கிலீஷ் துரைத்தனத்தார் அவரை விசாரிக்கத் தொடங்கினர். அந்த அவமானம் பொறுக்க முடியாமல் அவர் தற்கொலை செய்துகொண்டார்.

கேள்விகள்.

1. கிளைவ் முதலில் எந்த வேலை பார்த்தார்?

2. கிளைவ் ஆற்காட்டு யுத்தத்தில் முதலாவதாக எதைப் பிடித்துக்கொண்டார்?

3. பிளாசி யுத்தத்தில் கிளைவ் யாரைத் தோற்கடித்தார்?

4. அதனால் ஆங்கிலேயர்களுக்கு என்ன நன்மை உண்டானது?

15. விக்டோரியா மகா ராணியார்.

விக்டோரியாமகாராணியார்

விக்டோரியா மகா-ராணியார் சுமார் 100 வருஷங்களுக்கு முன் இங்கிலாந்துக்கு அரசியரானார்; நன்னடத்தையாலும் உத்தம குணங்களாலும் ஜனங்கள் அவரைப் பாராட்டினர். நமக்கும் அவர் சிற்சில நன்மைகளைச் செய்ததால் நாமும் அவருக்கு நன்றிசெலுத்துகிறோம்.

அரசியாரான பொழுது, விக்டோரியா மகாராணியாருக்கு வயது பதினெட்டு. அவர் சிங்காதனமேறி 64 வருஷகாலம் செங்கோல் செலுத்தினர். தாம் அரசு செய்தகாலம் முழுதும் நமது இராணியார் ஜனங்களுக்கு எப்பொழுதும் நன்மையையே நாடி, பெற்ற தாய்போலப் பாதுகாத்தார். இந்தியரிடம் அவருக்கு அளவில்லாத அன்பு உண்டு. அவர் ப்ரின்ஸ் ஆல்பர்ட் என்ற அரச குமாரரை மணந்து கொண்டார். இராணியார் இந்தியாவுக்கு ஒரு விளம்பரம் செய்தார். "இந்த இராஜ்யத்தில் எப்பொழுதும்

சாதுக்களுக்குத் துன்பமில்லை. இந்தியர், இங்கிலீஷ்காரர் என்ற பேதமின்றி அரசாங்கத்தில் திறமைக்குத் தக்கபடி வேலை கொடுக்கப்படும். அவரவர் தத்தம் மதங்களை யாதொரு தடையுமின்றிப் பின்பற்றலாம். குடிகள் யாதொரு துன்பமும் இன்றி நியாயமாகப் பாதுகாக்கப் படுவார்கள்". இதுவே அந்த விளம்பரம்.

அவருக்குக் கடவுளிடம் பக்தி மிகவும் அதிகம். 1901-ம் வருஷம் விக்டோரியா மகாராணியார் இறந்தார். அப்பொழுது அவர் குடிகள் யாவரும் பெரிதும் வருந்தினர்.

கேள்விகள்.

1. விக்டோரியா மஹாராணியார் எந்த நாட்டு இராணியார்?

2. எக்குணங்களால் ஜனங்கள் அவளைப்பாராட்டினார்கள்?

3. அவர் இந்தியாவுக்குச் செய்த விளம்பரத்தில் கூறிய இரண்டு செய்திகளைக் கூறு.

திருச்சிராப்பள்ளி ஜில்லாவின் முக்கிய சரித்திரக் குறிப்புக்கள்.

---

16. சோழர்கள்.

பிள்ளைகளே! தற்காலம் நமது ஜில்லாவில் வசிக்கும் கள்ளர் மறவர் என்ற ஜாதியாரை உங்களுக்குத் தெரியுமல்லவா? இவர்கள் ஆதியில் நம் நாட்டில் வசித்து வந்தவர்கள். அவர்களுக்குப்பின் நமது ஜில்லா சோழர்களின் ஆட்சிக்குள் வந்தது.

சோழ அரசர்கள் 14-வது நூற்றுண்டுவரையில் நம் ஜில்லாவிலும் அதைச் சுற்றியுள்ள பாகங்களிலும் ஆட்சி செலுத்தினர். உறையூர், காவிரிப்பூம் பட்டினம், தஞ்சாவூர், கங்கை கொண்டசோழபுரம் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலத்தில் அவர்களுக்குத் தலைநகரங்கள் ஆயிருந்தன. சோழர்களைப்பற்றியும், இன்னும் தென்னிந்தியாவில் ஆண்ட சேரபாண்டியர்களைப் பற்றியும் அசோக சக்கரவர்த்தி தம் சாஸனங்களில் குறிப்பிட்டிருக்கிருர்.

சோழ வமிசத்தில் கரிகாற்சோழர் முதல் அரசர். இவர் சுமார் 1900 வருஷங்களுக்கு முன் இருந்தவர். இவர் சிறுவராயிருக்கும் போது, தம் தந்தையை யிழந்ததால் நாட்டைப் பகைவனொருவன் கைப்பற்றிக் கொண்டான். அப் பகைவன் மிகக் கொடியவனாகையால் அவனைப் பிரஜைகள் நாட்டினின்றும் துரத்தி விட்டனர். கரிகாற்சோழர் திரும்பவும் அரசர் ஆனார். அதன் பின், துரத்தப்பட்ட பகைவன் திரும்பி வந்து கரிகாலரைச்சிறையிலடைத்து, அவர் இறக்குமாறு சிறைச்சாலையிலும் தீ வைத்தான். கரிகாற்சோழர் சிறையிலிருந்து வெளியேறுவதற்குள் அவருடைய கால் கருகிப்போயிற்று. இதனால்தான் அவருக்குக் கரிகாலர் என்ற பெயர் வந்தது.

கரிகாலர் ஒரு சிறந்த வீரர்; சேர, பாண்டியர்களையும், பல சிற்றரசர்களையும் வென்றார். இவர் நாகர்களில் பலரைத் தமக்குக் கீழ்ப்படியும்படி செய்தார். காவேரியில் அணைகட்டிப் பல கால்வாய்களை வெட்டினார்; காவேரி நதியின் முகத்துவாரத்திலுள்ள காவிரிப்பூம் பட்டினம் என்னும் துறைமுகப் பட்டினத்தைக் கட்டினார்; அதையே தமக்குத் தலைநகராகக்கொண்டார். அவ்வாறு செய்தது வியாபார விருத்திக்காகவே ஆகும்.

இவர் நாட்டைச் செழிப்பாகச் செய்தமையால் இவருக்குக் கரிகாற் பெருவளத்தார் என்றும் பெயர்.

இவருக்குப்பின் நலன்கிள்ளி, கிள்ளிவளவன், முதலிய அரசர்கள் அரசாண்டனர். கிள்ளிவளவனுடைய தம்பியான பெருநற்கிள்ளி ஓர் இராஜசூய யாகம் செய்தார்.

அதன் பின் 7-வது நூற்றுண்டில் ஒரு சோழ அரசர், தம் குமாரத்தியான மங்கையர்க்கரசி என்பவளைப் பாண்டிய நாட்டு மன்னருக்கு மணம் செய்து கொடுத்தார். அவள் திருஞான சம்பந்தரின் உதவியைக் கொண்டு சமணமதத்தினரான தம் கணவனைச் சைவமதத்தில் சேர்த்தாள்.

மேலும் அக்காலத்தில் பல்லவ அரசர்களான சிம்மவிஷ்ணு, மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் முதலியவர்கள் சோழர்களைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்தினார்கள். அவர்களில் ஒரு அரசர் திருச்சி மலையிலுள்ள குகைக்கோவிலையும், பிம்பங்களையும் குடையச் செய்தார். பல்லவர்களுக்குப்பின் சாளுக்கியர்கள் பிரபலம் அடைந்தனர்.

இவ்விதம் தாங்கள் இழந்த கீர்த்தியைச் சோழர்களில் இராஜராஜ சோழர் என்ற அரசர் காலத்தில் திரும்பவும் பெற்றனர். இராஜராஜ

சோழருக்கு 'இராஜகேசரி வர்மன்' என்ற பெயரும் உண்டு. மேற்கே கொல்லமும், குடகும், தெற்கே கன்னியாகுமரியும், வடக்கே ஒரிஸாவும் இவரது நாட்டிற்கு எல்லைகளாக இருந்தன. இவர் தஞ்சாவூரிலுள்ள சிவன் கோவிலைக்கட்டினர்; காவேரிநதியின் தண்ணீர் நிலங்களுக்கு உபயோகம் ஆகும்படி முன்னிலும் பல சிறந்த ஏற்பாடுகளைச் செய்தார். இவர் குடிகளுக்குச் செய்த நன்மைகள் பல.

இவருடைய மகன் இராஜேந்திர சோழரும் கீர்த்தி பெற்றவரே. இவர் 1011-லிருந்து 1044-வரை அரசாண்டார். இவர் கங்கைநதி வரையிலுள்ள நாடுகளை ஜயித்ததால், இவருக்கு, கங்கைகொண்டசோழர் என்ற பெயர் ஏற்பட்டது. நம் ஜில்லாவைச் சேர்ந்த உடையார் பாளையம் தாலூகாவிலுள்ள கங்கைகொண்ட சோழபுரம் இவரால் கட்டப்பட்டது. அவர் அங்கே ஒரு சிவன் கோவிலும் கட்டினர். இவர் அதைத் தமக்கு இராஜதானியாகவும் ஆக்கிக்கொண்டார். இவருக்குப் பின்வந்த சோழர்களும் இதையே தலைநகராகக் கொண்டனர். ஸ்ரீமந் நாதமுனிகள் என்ற பெரியார் அடிக்கடி இந்நகருக்கு வந்து கொண்டிருந்து அங்கேயே மரணமடைந்தார்.

கி. பி. 1070-முதல் 1118-வரை ஆண்டவர் முதலாம் குலோத்துங்கன் என்பவர். இவர் இராஜேந்திர சோழருடைய பெண் வயிற்றுப் பேரர். இவர் நடத்திய போர்கள் அநேகம். இவர் குடிகளுக்காகப் பல ஏரிகளை வெட்டினர். இவருக்குக் கவிபாடும் திறமையும் உண்டு. இவருடைய வேண்டுகோளுக்கு இணங்கியே சேக்கிழார் என்பவர் பெரிய புராணத்தை இயற்றினர். ஸ்ரீமத் ராமாநுஜாசாரியார் இவர் காலத்தில் வாழ்ந்து வந்தார். 12-ம் நூற்றுண்டின் கடைசியில் சோழர்களுடைய பலம் குறைந்தது. 1251-ஸூ முதல் 10-வருஷங்களாகப் பாண்டியர்களுக்கு இச்சோழ தேசத்தில் அதிகாரம் ஏற்பட்டது. அவ்வாறு அதிகாரம் செலுத்தியவர் ஜடாவர்ம சுந்தரபாண்டியர் என்பவர். இவருடைய இராஜ்யம் நெல்லூர்வரை பரவியிருந்தது.

கேள்விகள்.

1. கரிகாற்சோழர் கட்டிய ஊர் எது?
2. தஞ்சாவூர் சிவன் கோவிலைக் கட்டிய அரசர் யார்?
3. இராஜேந்திர சோழர் யாருடைய குமாரர்?
4. சோழ தேசத்தில் அதிகாரம் ஏற்படுத்திய பாண்டிய மன்னர் யார்?

17. மாலிக்காபரும், முகம்மதியர் ஆதிக்கமும்.

கி. பி. 14-வது நூற்றுண்டின் ஆரம்பத்தில் வட இந்தியாவில் அலாவுதீன் கில்ஜி என்ற சுல்தான் டில்லியைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்தார். அவரிடம் மாலிக்காபர் என்ற சேனைத்தலைவர் இருந்தார். அலாவுதீன் மாலிக்காபரைத் தென்னிந்தியாவை ஜயித்து வரும்படி ஒரு படையுடன் அனுப்பினர். இவரே முதல் முதலாகத் தென்னிந்தியாவைப் படையெடுத்து வந்த முகம்மதியர். இவர் தெற்கே இராமேசுவரம் வரை சென்றார். இக்காலத்தில் சோழபாண்டியர்கள் பலம் குறைந்து இருந்தனர். மாலிக்காபர் அவர்களை வென்று நாட்டைத் தம் வசமாக்கினர்.

மாலிக்காபருடைய படையெழுச்சிக்குப் பின் 50- வருஷங்கள்வரை திருச்சிராப்பள்ளி முகம்மதியர்கள் வசம் ஆயிற்று. தஞ்சாவூரின்பெரும் பாகமும் அவர்களுடைய ஆட்சியின் கீழிருந்தது.

கி. பி. 1365-ம் வருஷத்தில் திருச்சிராப்பள்ளி, விஜயநகர இராஜ்யத்தின் சேனை ஒன்றினல் ஜயிக்கப்பட்டது. இவ்வாறு ஜயித்து அதிகாரத்தை ஸ்தாபித்தவர்கள் கம்பண உடை

யர், விருபாக்ஷன் என்ற இரண்டு விஜயநகர வம்சத்தின் அரச குமாரர்கள். இவ்விருவரும் முகம்மதியரை வடக்கே துரத்திவிட்டனர். அவர்களுக்குப் பின்னுல் வந்த கிருஷ்ண தேவ-ராயர் பேர் பெற்றவர். அதன்பின் விஜயநகர அரசருக்கு உட்பட்டுச் சோழர்கள் சில காலம் திருச்சிராப்பள்ளியை அரசாண்டு வந்தனர்.

கேள்விகள்.

1. திருச்சிராப்பள்ளியைக் கைவசப்படுத்திய டில்லி அரசர் யார்?

2. மாலிக்காபருக்குப் பின் திருச்சிராப்பள்ளியை வென்றவர் யார்?

3. விஜயநகர அரசர்களிற் பேர் பெற்றவர் யார்?

---

18. நாயக்கர்கள்.

இப்படியிருக்கையில் வீரசேகரர் என்ற ஒரு சோழ அரசர் 1559-ல் விஜயநகர அரசருடைய சம்மதம் இல்லாமல் பாண்டிய அரசரை எதிர்த்து அவரது நாட்டைக் கைப்பற்றினர். இதை யறிந்த விஜயநகர அரசர், நாகமநாயக்கர் என்ற ஒரு சேனைத்தலைவரை யனுப்பி வீரசேகரரைத் துரத்தும்படி சொன்னர். நாகமநாயக்கர் அவ்

விதமே செய்துவிட்டுத் தாமே நாட்டையாளத் தொடங்கிவிட்டார். விஜயநகர அரசர் நாகம ரின்மீது கோபமடைந்து, 'அவருடைய தலை-யைக் கொண்டு வரக்கூடியவர்-கள், நம் சேனையில் ஒருவரும் இல்லையா?' என்று கேட்டார்.

விசுவநாத நாயக்கர்.

அப்பொழுது யாவரும் ஆச்சரியப்படத் தக்கவிதமாக, நாகமரின் மகனை விசுவநாத நாயக்கரே அச்செயலை நிறை வேற்றுவதாக ஒப்புக்கொண்ட-னர். உடனே அவர் சென்று தம் தந்தையைச்சிறை பிடித்து அரசன் முன் கொண்டுவந்து நிறுத்தினர்.

அப்பொழுது சந்தோஷமடைந்த அரசர் விசுவநாதரை நோக்கி, 'உனக்கு என்ன வரம் வேண்டும்?' என்று கேட்க, விசுவநாதர் தம் தந்தையை மன்னிக்கும்படி அவரை வேண்டி னர். அரசர் அவ்வாறே மன்னித்தார். பாண் டிய அரசர் பெயருக்கு மாத்திரம் மதுரையில் அரசராக இருந்தார்கள். ஆனல் உண்மையில் விஜயநகர அரசரால் சகல அதிகாரமும் விசுவ

நாதநாயக்கருக்கே கொடுக்கப்பட்டது. நாளடைவில் பாண்டியர்களின் அதிகாரம் குறைந்து விட்டது. விசுவநாதநாயக்கரே மதுரையை ஆண்டார். அவரே நாயக்கர் பரம்பரையை இங்கே ஸ்தாபித்த முதல் அதிபதியாவர். அவருடைய இராஜ்யம் நம் திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களையும், கோயம்புத்தூர் ஜில்லாவின் பெரும்பாகத்தையும் கொண்டது.

இவர்காலத்தில் ஸ்ரீரங்கம் இராமேசுவரம் முதலிய யாத்திரை ஸ்தலங்களுக்குச் செல்லும் பிரயாணிகளுக்குத் திருடர்கள் தொந்தரவு அதிகமாய் இருந்தது. அதை நீக்கச் சாலைகளில் காவற்காரர்களை அவர் ஏற்படுத்தினர். தஞ்சாவூரிலிருந்த தமக்குச் சொந்தமான வல்லம்கோட்டையைத் தஞ்சாவூர் அரசர்க்கு,கொடுத்துவிட்டு அவருக்குச் சொந்தமான திருச்சிக் கோட்டையைத் தாம் பெற்று அதை நன்ருகக் கட்டினர். திருச்சியிலுள்ள மலைக்கு மேற்பக்கமுள்ள தெப்பக்குளம் இவரால் கட்டப்பட்டதே. ஸ்ரீரங்கத்துக்கோயிலிலும் சிலசிர் திருத்தங்களை இவர் செய்தார். இவர் காலத்தில்தான் பாளையக்காரர் முறை ஏற்பட்டது. பாளையக்காரர்கள் மதுரை நாயக்க அரசருக்கு உட்பட்டு அவருக்குக் கப்பம் செலுத்த வேண்டியவர்கள். விரோதிகள் வரும்போது, ஒவ்வொரு

பாளையக்காரரும் தம் சேனையுடன் வந்து நாட்டைக் காக்க வேண்டுமெனவும் ஏற்பட்டிருந்தது. தற்காலம் நம் ஜில்லாவில்வாழும் ஜமீன்தார்களில் பலர், இந்தப் பாளையக்காரர்களின் வம்சத்தைச் சேர்ந்தவர்களே.



திருமலை நாயக்கர்.

இவருக்குபின், 60 வருஷங்கள் கழித்துப் பிரசித்தி பெற்ற திருமலை நாயக்கர் பட்டத்திற்கு வந்தார். இவர் முதலில் திருச்சிராப்பள்ளியைத் தலைநகராகக் கொண்டு 12 வருஷங்கள் ஆண்டார்; அதன்பின் தம் தலைநகரை மதுரைக்கு மாற்றிக்கொண்டார். அவ்வாறு செய்ததற்கு ஒரு காரணம் கூறப்படுகிறது. அதாவது, அவர் காசநோயால் பீடிக்கப்பட்டிருந்த காலத்தில், ஒரு சமயம் அவர் திண்டுக்கல்லில் தங்கியிருந்தார். அச்சமயம் மதுரை சோமசுந்தரக் கடவுளும், மீநாக்ஷியும் அவர் கனவில் தோன்றி 'மதுரையை, தலைநகராக்கிக் கொண்டு அரசாண்டு வந்தால் உம்முடைய நோய் குணமாகும்' என்று அருளிச் செய்தனர். உடனே விழித்துக்கொண்டு திருமலை நாயக்கர் காசநோய் தம்மிடம் இல்லாமலிருந்ததை உணர்ந்தார். இதைக்கண்டு ஆச்சரியமுற்ற நாயக்கர் மதுரை வந்து சேர்ந்தார். அது முதல் அங்கிருந்தே அரசாண்டு வரலானார்.

இவருக்குப்பின் இவருடைய குமாரர் முத்து அளகாத்திரி என்பவர் அரசரானார். இவர் முகம்மதியர்களுடைய தொந்தரவை நீக்க எண்ணித் திருச்சிகோட்டையைப் பலப்படுத்தி யுத்தத்திற்கு வேண்டியவைகளையும் சேகரித்தார். திருச்சியைப் பிடிக்கவந்த முகம்மதியர் சேனை அங்குச் செய்யப்

பட்டிருந்த யுத்த ஏற்பாடுகளைக் கண்டு பயந்து திரும்பிப்போய் விட்டது; வழியிலிருந்த வல்லப் கோட்டையைப் பிடித்துக் கொண்டு திரும்பவும் திருச்சியை எதிர்த்தது. முத்து அளகாத்திரி கோட்டைக்குள் சௌக்கியமா யிருந்தார். எனினும், முகம்மதிய சைனியமானது வரவரக் குறைந்துபோனதாற் சிறிது பணத்தை மட்டும் பெற்றுக்கொண்டு தானே போய்விட்டது.

முத்து அளகாத்திரி நாயக்கர் மகன் சொக்கநாதநாயக்கர். அவர் திருச்சிமலைக்குத் தெற்கிலுள்ள நாயக்கர் அரண்மனையைக் கட்டினவர்.

1731-ம் வருஷத்தில் விஜயரேங்க சொக்கநாத நாயக்கர் இறக்க, அவருடைய மனைவி மீனாட்சியம்மாள் அரசியானாள். அவள் பங்காரு திருமலை என்ற ஒருவருடைய குமாரனை சுவீகாரம் செய்து கொண்டாள். சில காலத்திற்குப்பின் பங்காரு திருமலை யென்பவர் தமக்கே பட்டம் உரியதென்று வழக்காடினார். அச்சமயத்தில் ஆற்காடு நவாபினால் அனுப்பப்பட்ட சந்தா சாஹேப் என்பவர் இவ்வழக்கில் தலையிட்டார். மீநாட்சி அவருக்கு ஒரு கோடி ரூபாய் கொடுப்பதாகவும் தமக்கு உதவி செய்யவும் வேண்டினாள். சந்தா

சாஹேறபும் அவ்வாறே செய்வதாக ஆணையிட்டுக் கூறினர். பங்காரு திருமலையும் மதுரைக்கு அனுப்பப்பட்டார்.

இரண்டு வருஷங்கள் கழித்துச் சாந்தா சாஹேறப் மதுரைக்குச் சென்று பங்காரு திருமலையைத் தோற்கடித்துப் பின் திருச்சிக் கோட்டைக்குள்ளும் வந்தார். மீநாட்சியினது நாட்டின்

சந்தா சாஹேறப்.

பெரும்பாகமும் தம் கைக்குள் வந்து விட்டதால் சந்தா சாஹேறப் அவளிடம் இதுகாறும் மரியாதையாக நடந்துவந்ததை விட்டு, அவளை அவளுடைய அரண்மனையிலேயே வைத்துப் பூட்டினர். மீநாட்சியும் அவமானம் தாங்காது உயிரை விட்டாள். சாந்தா சாஹேறப் திருச்சிக் கோட்டையைப் பலப்படுத்திக் கொண்டார். பின் தம் இரண்டு சகோதரர்களைத் திண்டுக்கல்லிலும், மதுரையிலும் கவர்னர்களாக நியமித்தார்.

கொஞ்சக் காலத்துக்குள் மஹாராஷ்டிரர்கள் அச் சந்தா சாஹேறபைத் தோற்கடித்துக்

கைதியாக்கினர். ஆயினும் சந்தா சாஹேப் உயிர் தப்பி ஓடினர். அவர் ஆற்காட்டின் நவாபைக் கொன்றுவிட்டுத் தாமே நவாப் ஆனர். அவருக்குப் பிரஞ்சுக்காரர் உதவி செய்தார்கள். பழைய நவாபின் மகனுன முகம்மது அலி என்பவர் திருச்சிராப்பள்ளியில் ஒளிந்துகொண்டார்.

முகம்மது அலி.

கேள்விகள்.

1. திருச்சிராப்பள்ளியை ஆண்ட முதல் நாயக்கர் அரசர் யார்?

2. பாளையக்காரர் முறை என்றால் என்ன? அதை ஏற்படுத்தியவர் யார்?

3. விசுவநாத நாயக்கர் திருச்சிராப்பள்ளியில் எக் கட்டிடங்களைக் கட்டினர்?

4. திருமலைநாயக்கர் முதலில் எங்கிருந்து ஆண்டார்?

5. அவர் தமது தலைநகரை ஏன் மாற்றினர்?

6. திருச்சிராப்பள்ளி எப்படி கர்னுடக நவாப் வசம் வந்தது?

19. இங்கிலீஷ்காரர்கள்.

அவ்வாறு இருந்த முகம்மது அலி, இங்கிலீஷ்காரரைத் தமக்கு உதவி செய்யும்படி அழைத்தனர். அப்படிப்பட்ட சமயம் வந்தது, இங்கிலீஷ்காரருக்கு அனுகூலம் ஆனது. அவர்கள் முகம்மது அலிக்கு உதவி செய்ய ஒப்புக்கொண்டார்கள். அப்போதுதான் கிளைவ், சந்தா சாஹேபின் தலைநகரான ஆற்காட்டைப் பிடித்துக்கொண்டார். முகம்மதுஅலி திருச்சிராப்பள்ளியிலிருந்து விடுதலை அடைந்தார்; கர்னாடக நவாப் ஆனார். இக்காலத்தில் நடந்த சண்டைகளில் ரஞ்சங்குடி என்ற ஊரில் இங்கிலீஷ்காரருக்கும், பிரஞ்சுக்காரருக்கும் சண்டை நடந்தது. ஸ்ரீரங்கம், திருவானைக்கா என்ற இரண்டும் இங்கிலீஷ்காரர்கள், முகம்மதியர், பிரஞ்சுக்காரர் முதலியோரின் சேனைகள் தங்கும் இடமாய் இருந்தது.

முற்கூறியபடி, முகம்மதுஅலி கி. பி. 1795-ஹுவரை நவாபாக இருந்த பிறகு, 1801-வரை அவர் மகன் நவாபாக இருந்தார். அப்போது இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தவர் வெல்லஸ்லிபிரபு. அவர் முகம்மதுஅலியும் அவர் மகனும் இங்கிலீஷ்காரருக்கு எதிரிகளான திப்பு சுல்தானுடன் சிநேகமாய் இருந்ததாகச் சந்-

தேகித்தார். அதற்கு ஆதாரங்களும் கிடைத்தன. ஆதலால் அவர் கர்னாடகத்தை இங்கிலீஷ்காரர் இராஜ்யத்துடன் சேர்க்கத் தீர்மானித்தார். அதன் படி திருச்சிராப்பள்ளி கி. பி. 1801-ஹூ இங்கிலீஷ் ஆட்சிக்குக் கொண்டுவரப்பட்டது.

இதுவரை இங்கிலீஷ்காரர் என்று சொன்னோம் அல்லவா? அவர்கள் ஈஸ்ட் இந்தியாகம்பேனி என்ற வியாபாரக் கூட்டத்தார். இவர்களிடம் இருந்து கி. பி. 1858-ல் விக்டோரியா மஹாராணியார் இந்தியா முழுவதையும் தமது நாடாக்கிக் கொண்டார். இப்போது நம் ஜில்லா அடங்கிய நமதுதேசத்தை ஆள்பவர், விக்டோரியா மஹாராணியாரின் பேரனுடைய குமாரர் ஆகிய ஆரும் ஜார்ஜ் சக்கரவர்த்தி. அவர் இங்கிலாந்தில் வசிக்கிறார்.

ஆரும் ஜார்ஜ் சக்கரத்தி.

NEW PUBLICATIONS.

ACCORDING TO THE 1939 SYLLABUS.

INDIAN HISTORY.

A. S. Guruswamy B. A., L. T., & N. R. S. Sarma.

For the III Standard—Each District	As	$3\frac{1}{2}$
For the IV Standard—Each District	As.	4
For the V Standard	As.	5

CIVICS.

V. G. Srinivasan B. A., L. T., & S. P. D. Sigamoni.

IV Standard	As.	3
V Standard	As.	5

NATURE STUDY & GARDENING.

K. S. Sankaran B. SC. (AG.) & P. R. Daniel.

IV Standard	As.	3
V Standard	As.	$4\frac{1}{2}$

S. N. RATHNAM & Co,
Educational Publishers,
PASUMALAI
(MADURA DIST.)